**நிவிதிகல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் நிவிதிகல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிற்காக கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 13,063,561 மற்றும் நீதி மன்ற தண்டப்பணம் ரூபா 44,197 மீளாய்வாண்டு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுகளிற்கான வருமானம் திரண்ட நிதியத்தினூடாக சிராக்கம் செய்யப்பட வேண்டும். | சரி செய்து கணக்கீடு செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 299,619 திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய அனைத்து வருமானங்களையும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குரிய தேசிய கடன் அபிவிருத்தி நிதிய கணக்கின் கடன் தவணை ரூபா 347,553 யினை மூலதன செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய செலவினம் மற்றும் கடன் மீள் செலுத்தலை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2019 ஆண்டிற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்படவில்லை. | ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய செலவுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 8,991,162 ஆன வித்தியாசம் நிலவியது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். | உரிய வித்தியாசங்களை பரீட்சித்துப் பார்த்து சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்தவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான கூட்டுத்தொகை ரூபா 1,359,445 ஆன நாநாவித வைப்புகள், டென்டர் வைப்புகள், ஒப்பந்த மற்றும் வேலை பிணை வைப்புக்கள் இனங்கணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிம். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 07 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாணி செயற்படும் வகெனங்களின் எரிபொருள் பாவணை உரிய முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், மாணிகள் செயலிழந்துள்ள வாகனங்களின் மாணிகளை பொருத்தி எரி பொருள் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிற்காக செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிலிருந்து செயற்படுத்துவதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும். | காணப்படும் இணைய வசதிகளை சேவைகளை வழங்க மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,283,655 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,855,332 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 3,489,013 | 3,269,533 | 3,381,423 | 1,214,652 | 3,168,296 | 3,279,385 | 3,384,786 | 1,340,102 |
| (ii) | வாடகை | 8,637,500 | 6,407,890 | 6,437,990 | 60,850 | 4,399,800 | 5,553,416 | 5,568,416 | 90,950 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 844,250 | 605,874 | 605,874 | 1,500 | 538,300 | 479,696 | 483,196 | 1,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,628,975 | 27,469,093 | 33,204,463 | 9,577,545 | 12,396,250 | 18,427,938 | 17,026,489 | 15,433,247 |
| | | 29,599,738 | 37,752,390 | 43,629,750 | 10,854,547 | 20,502,646 | 27,740,435 | 26,462,887 | 16,865,799 |

### 2.2.2 வீத வரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீத வரி | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 996,275 ஆன நிலுவை வீத வரியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து நிலவி வரும் 146 அலகுகளிற்குரிய ரூபா 334,888 உள்ளடங்கியிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். | 2019 ஆண்டில் சொத்துக்களை இரத்துச் செய்யும் நிகழ்சித் திட்டத்தின் மூலம் நிலுவை வருமானம் சேகரிக்கப்பட்டது எனவும், மேலும் காணப்படும் நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கிறேன். |
| (ii) | விதவரி அறவிவடுதற்காக சபை அதிகார எல்லையினுள் அனைத்து அசையா சொத்துக்களையும் 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், 2011 ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விதவரி சொத்துக்கள் 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதும் இது வரை அச் செயற்பாடு நிறைவேற்றப்படவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஆ) | ஏக்கர் வரி | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 91,115 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 73 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் ரூபா 65,743 உள்ளடங்கியுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வும், நிலுவை தொகை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 அன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,558,583 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,438,835 ஆனது. 2019 ஜுலை முதல் திசெம்பர் வரை காலத்திற்குரிதாக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2020 மார்ச் வரையும் இனங்கண்டு இருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஜுலை முதல் திசெம்பர் வரை காலத்திற்குரிய முத்திரை கட்டண அட்டவணைகள் விடைக்கவில்லை என அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திண்மக் கழிவு முகாமைத்தவ செயற்பாடுகளுக்காக முறையான அனுமதியின்றி 08 ஊழியர்களை ஆட்சேர்த்து 2017 ஆண்டு முதல் 2019 ஒக்தோபர் வரையான காலத்திற்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 3,454,772 செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர் ஆட்சேர்ப்பை முறையாக மேற்கொள்ள வேண்டும். | 2017 இல் ஏற்பட்ட அவசர இடர் நிலைமையினால் அதிகார பிரதேசத்தில் ஒன்று சேர்ந்த கழிவுகளை சேர்ப்பது மற்றும் இறுதி வெளியிடல் மேற்கொள்ள தொழிலாளர்கள் போதாமையினால் சேவையை தொடர்ந்து செய்வதற்கு தின அடிப்படையில் சேவையை பெற்றுக் கொண்டுள்ளதாகவும், தற்போது அவர்களை ஆட்சேர்க்க சபையினால் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | நிரந்தர சாரதி பதவிகளில் காணப்படும் 03 வெற்றிடங்களுக்காக மூன்று அமைய சாரதிகள் சேவை ஒப்பந்தம் மீது ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும் அச் சாரதிகள், ஆட்சேர்ப்பு திட்டத்தின் குறிப்பிட்பபடும் கல்வி தகைமைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | ஊழியர் ஆட்சேர்ப்பு, குறித்த ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ் ஊழியர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலுடன் மாவட்ட செயலக மட்டத்தில் நடாத்தப்படும் முறையான சான்றிதழுடனான 10 நாட்கள் பயிற்ச்சி நெறிக்கு அனுப்ப கோரிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுனுள் இனங்காணப்பட்டிருந்த 08 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற அல்லது சட்டரீதியாக்க சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழில்நுட்ப அலுவலரின் பரிசோதனையின் பின்னர் எழுத்து மூலமாக அறிவூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 149,950,452 ஆன நடைமுறையல்லாத சொத்தக்கள் சபைக்கு சொந்தமாக இருந்த போதும் சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக பேணப்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக நடாத்தப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாக வும், இயந்திரம் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகளை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான அகற்றப்பட்ட 02 வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அகற்றப்பட்ட வாகனங்களை பராதீனம் செய்ய வேண்டும். | குறித்த வாகனங்களை 2019 திசெம்பர் 27 ஆம் திகதி ஏலவிற்பனை செய்த போதும், கொள்வனவாளரொருவர் முன்வராததுடன், புதிய மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்காலத்தில் மீண்டும் ஏலவிற்பனை செய்யப்படும் என அறிவிக்கிறேன். |

**3.3.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 09 வாகனங்கள் சபையின் பெயரில் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை ஏடுத்திருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் சொத்துக்களை முறையாக சுவீகரித்திற்கொள்ள வேண்டும். | குறித்த வாகனங்களை சபைக்கு சுவீகரித்திற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் அல்லது ஏனைய சுற்றறிக்கைகளினூடாக ஏனும் மக்கள் பிரதிநிதிகளுக்கு கடன் முற்பணம் வழங்குவதற்கான அதிகாரமொன்று | மக்கள் பிரதிநிதிகளுக்கு விழா முற்பணம் வழங்க எழுத்து மூல | 2019 ஏப்ரல் 09 ஆம் திகதிய மாதாந்த சபையின் 05:07:iii ஆம் இலக்க தீர்மானம் பிரகாரம் இக் கடன்தொகை |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருக்காத போதும் 14 மக்கள் பிரதிநிதிகளுக்கு ரூபா 350,000 விழா முற்பணம் 2019 ஏப்ரல் மாதம் செலுத்தியிருந்தது. | சட்டமொன்றினால் ஏற்பாடு வழங்கப்பட்டிருக்க வில்லை. | வழங்கப்பட்டதாக அறிவிக்கிறேன். |

**3.5 பெறுகைகள்**

**வழங்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டி கோவையில் 2.7.7 மற்றும் 2.8.5 பிரிவுகளின் ஏற்பா்டுகளுக்கு முரணாக பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கீகாரமின்றி ரூபா 230,000 செலவில் சபைக்கு சொந்தமான கெப் வண்டியொன்றிற்கு கெனபியொன்று பொருத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |